Translation for Executive summary of RPF

## பிரத்தியேகச் சுருக்கம்

இலங்கையின் வளர்ந்துவரும் பொருளாதாரம் உலகளாவிய காலநிலை மாற்றத்தினால் முன்வைக்கப்பட்ட மேலதிக சவாலொன்றைத் தற்போது முகங்கொண்டுள்ளது. உலர் வலயத்தில் ஏற்படுகின்ற கடுமையான, நீண்ட கால வறட்சியினையும் அத்துடன் ஈர வலயத்தில் ஏற்படுகின்ற கடுமையான வெள்ளப்பெருக்கினையும் இந் நாடு தற்போது முகங்கொள்கின்றது. நாட்டின் ஈரமான பகுதிகள் இறுதியில் ஈரமாக மாறும் அதே நேரத்தில் வறண்ட பகுதிகள் மேலும் வறண்டு போகும் என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

2018 ஆம் ஆண்டின் உலகளாவிய காலநிலை இடர்ச் சுட்டெண் உலகில் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளின் மத்தியில் இலங்கையை நான்காவதாகத் தரவரிசைப்படுத்தியதுடன், 2019 ஆம் ஆண்டில் இலங்கை மிகவும் உயரியளவில் பாதிப்படையக்கூடிய 2 ஆவது நாடாகவும் தரவரிசைப்படுத்தப்பட்டது. அதாவது, காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் தணிப்பு அளவீடுகள் செயற்படுத்துகையானது இந் நாட்டின் மிகவும் பாதிப்படையக்கூடிய குழுக்களின் சீரற்ற நிலையினை உயர்த்துகின்ற உயரிய முன்னுரிமைத் தேசிய தேவைகளாகும். உரிய சர்வதேசக் கடப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளைச் சமாளிப்பதற்கு பல்வேறு படிமுறைகளை இலங்கை அரசாங்கம் ஏலவே மேற்கொண்டுள்ளது.

இரண்டாவது உயரிய வள ஒதுக்கீடாக நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் ஆகியவற்றுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக 2017-2020 ஆம் ஆண்டுகளிற்கான அரசாங்கத்தின் பொது நிகழ்ச்சித்திட்டம் (The Government’s Public Investment Plan (PIP) for 2017-2020)

காட்டுகின்றது. கடந்த சில தசாப்தங்களில் இலங்கை, சர்வதேச நன்கொடை வழங்கும் முகவராண்மைகளின் உதவியுடன் நீர் மற்றும் நீரேந்துபிரதேசங்களுடன் தொடர்புடைய செயற்திட்டங்கள் சிலவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது.

நீர்பாசன அமைச்சின் கீழ் (Ministry of Irrigation - MI) நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் "இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நீரேந்துபிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவச் செயற்திட்டம்" (Sri Lanka Integrated Watershed and Water Resources Management Project - IWWRMP) காலநிலை மாற்றத்தினால் தூண்டப்பட்ட தற்போதுள்ள சவால்களைப் பிரதானமாகக் குறிப்பிடுவதற்கு உலக வங்கியினால் நிதி வழங்கப்படும் ஐந்தாண்டு காலச் செயற்திட்டமொன்றாகும். நீரேந்துபிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் திட்டமிடலை விருத்தி செய்வதும், நீர் வள உட்கட்டமைப்பின் தொழிற்பாட்டினை உயர்த்துவதும் இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நீரேந்துபிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் அபிவிருத்திக் குறிக்கோளாகும். இங்கு, தொழிற்பாடு என்பது குளத்தின் விருத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் நீர்பாசனத்தின் விருத்தி செய்யப்பட்ட நீர் வழங்கல் வலயமைப்பினையும் குறிக்கின்றது. இச் செயற்திட்டம் பின்வரும் நான்கு மூலக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது:

- கூறு 1. நீரேந்துபிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல்,
- கூறு 2. உட்கட்டமைப்பு விருத்திகள்,
- கூறு 3. தற்செயலான அவசர பதில் மற்றும்
- கூறு 4. செயற்திட்ட முகாமைத்துவம்.

இப் பல்வேறுபட்ட கூறுகளுக்கிடையில், நாட்டின் நீர் வளங்கள் திட்டமிடற் திறன் விருத்தியினையும் கூறு 1 நோக்காகக்கொள்ளும் அதேநேரத்தில் முதலாம் அல்லது இரண்டாம் கூறுகள் மட்டும் பௌதீக உட்கட்டமைப்பு வேலைகளை உள்ளடக்கியதாகவிருக்கும்.

கூறு 1 இன் செயற்பாடுகள் 31 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் உயர் மகாவலி நீர்நிலைப் பகுதிகளில் செயற்படுத்தப்படும். நீரேந்துபிரதேசங்கள் முகாமைத்துவத் திட்டமிடல், நீரேந்துபிரதேசங்கள் மீள்நிரப்பல் மற்றும் பல்துறை நீர் வளத் திட்டமிடல் ஆகியன கூறு 1 இன் கீழான பிரதான மூன்று உப கூறுகளாகும். உயர் மகாவலி நீரேந்துபிரதேசங்கள் முகாமைத்துவத் திட்டமிடற் தயாரிப்பு, UMW இனை மீட்பதற்குப் விவசாயம் சார் மற்றும் விவசாயம் சாரா மண் பாதுகாப்புச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் நீர் வளம் தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல் ஆகியன மேற்படி உப கூறுகளின் கீழ் செயற்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளாகும்.

குளங்களின் தொழிற்பாட்டியல் விளைதிறன் மற்றும் பாதுகாப்பினை விருத்தி செய்வதற்கு நீர்பாசனத் திணைக்களம் (ID), இலங்கை மகாவலி அதிகாரசபை (MASL), வட மாகாண சபை (NPC) மற்றும் கிழக்கு மாகாண சபை (NPC) ஆகியவற்றுக்குச் சொந்தமான இனங்காணப்பட்ட உயர் இடர் குளங்கள் மற்றும் வடிகான் முறைகளைக் கூறு 2 இன் கீழான செயற்பாடுகள் புனரமைக்கும். மேலே குறிப்பிடப்பட்ட முகவராண்மைகளினது நோக்கெல்லையின் கீழ் குளத்தின் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோக வலையமைப்பின் வினைதிறனை விருத்தி செய்து புனரமைப்பதற்கு 36 குளங்கள் மற்றும் 19 வடிகான்கள் இனங்காணப்பட்டுள்ளன.

கொள்கையொன்றாக இச் செயற்திட்டத்தின் தலையீடுகள் உலக வங்கியின் சூழல் மற்றும் சமுகக் கொள்கைகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். மேற்படி கொள்கையின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் முன்மொழியப்பட்ட தலையீடுகள் மக்களின் உடல்சார் இடப்பெயர்வுகளின்றி திட்டமிடப்பட்டு வழிநடத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவர்களின் உற்பத்திசார் சொத்துகளுக்கு நிரந்தர இழப்பு ஏற்படுத்தப்படலாகாது. எவ்வாறாயினும், இத் தலையீடுகளின் போது தற்காலிக தாக்கங்களுக்கான சாத்தியம் நிராகரிக்கப்பட முடியாததாகும். கூறு 1 மற்றும் 2 இன் கீழ் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வளங்களின் அணுக்கம் ஆகியவற்றின் மீது தற்காலிக தாக்கத்தினை உருவாக்கலாம்.

தூண்டப்பட்டுள்ள தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் மீதான உலக வங்கியின் தொழிற்பாட்டுக் கொள்கை (OP) 4.12 வகைப்பாடு ஆ(B) இற்கான பாதுகாப்பொன்றாக இச் செயற்திட்டம் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயற்திட்டச் செயற்பாடுகளின் மூலம் மீள் குடியேற்றத்தின் தாக்கம் "பிரதிபலிப்பு" ஆதல் வேண்டும். எவ்வாறாயினும், தொழிற்பாட்டுக் கொள்கை (OP) 4.12 இணைப்பு அ இன் 23 ஆம் பந்தி மீள்குடியேற்றக் கொள்கைக் கட்டமைப்பொன்றினைத் (RPF) தயாரிப்பதற்கான தேவையினைக் குறிப்பிடுகின்றது. இத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு மீள்குடியேற்றக் கொள்கைக் கட்டமைப்பனது காணி எடுத்தற் சட்டத்துடன் தொடர்புடைய இலங்கைச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உரிய உலக வங்கியின் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இச் செயற்திட்டத்தின் உப கூறுகளுக்குப் பிரயோகிக்கப்பட வேண்டிய மீள்குடியேற்றக் கொள்ளைகள், நிறுவனஞ்சார் ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் வடிவமைப்பு அளவுகோல்கள் ஆகியவற்றை இம் மீள்குடியேற்றக்

கொள்கைக் கட்டமைப்பு தெளிவுபடுத்தும். மேலதிகமாக, இம் மீள்குடியேற்றக் கொள்கைக் கட்டமைப்பு, வாழ்வாதார இழப்பு உள்ளடங்கலாக சாத்தியப்பாடான தாக்கங்களுக்கான அனைத்துத் தலையீடுகளையும் பரிசோதிப்பதில் இச் செயற்திட்டத்திற்கு வழிகாட்டுதுடன், குறிப்பான தாக்கங்களைத் தெரிவிப்பதற்கும், குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையினைத் தாபிப்பதற்கும், பரவுதலுக்கான தகவலைக் கொண்டு செல்வதற்கும் மற்றும் பங்காளர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் ஈடுபாடுகளை நடாத்துவதற்கும் உரிய வாழ்வாதார ஒத்துழைப்பு உதவி நிகழ்ச்சிகள் அல்லது மீள்குடியேற்றத் திட்டங்கள் (RPs) ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதில் PMU இற்கு வழிகாட்டுதலும் வேண்டும்.